**D–2043**

| Sub. Code |
|---|
| **10713** |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

First Semester

தமிழக வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. உலகில் முதன் முதலில் மக்களினம் தோன்றிய பகுதி எது?

2. உலகப் பயணிகளின் இளவரசர் என அழைக்கப்படுபவர் யார்?

3. குலபதி என்னும் பட்டம் யாருக்கு வழங்கப்பட்டது?

4. திராவிட சங்கத்தைத் தோற்றுவித்தவர் யார்?

5. வாதாபிக் கொண்டான் என சிறப்பிக்கப் பெற்ற மன்னன் யார்?

6. பல்லவர்களின் சின்னம் எது?

7. சுங்கம் தவிர்த்த சோழன் யார்?

8. மூக்கறுப்புப் போர் எம்மன்னன் காலத்தில் நிகழ்ந்தது?

9. தஞ்சை சரசுவதிமகாலினை உருவாக்கியவர் யார்?

10. கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்று பாடியவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழ்நாட்டின் இயற்கை அமைப்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பல்லவர் காலச் செப்பேடுகள் குறித்து விளக்குக.

12. (அ) சங்ககாலப் பெண்டிர் நிலையினை விளக்குக.

(அல்லது)

(ஆ) களப்பிரர் வரலாற்றினை எடுத்துரைக்க.

13. (அ) பிற்காலப் பல்லவர்களின் தோற்றம் பற்றி கூறுக.

(அல்லது)

(ஆ) முதலாம் இராசராசனின் தனிச்சிறப்புகள் குறித்து எழுதுக.

14. (அ) பாண்டியர் வீழ்ச்சியும் இசுலாமியர் எழுச்சியும் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) மார்க்கோபோலோவின் குறிப்புகளை எடுத்துரைக்க.

15. (அ) பாளையப்பட்டு ஆட்சி முறையை-விவரி.

(அல்லது)

(ஆ) இந்திய விடுதலைப்போரில் தமிழக கலைஞர்களின் பங்களிப்பினை எடுத்துரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் பற்றி கட்டுரைக்க.

17. தமிழர்கள் வாழ்வியலை ஐந்திணைகளாகப் பகுத்து வாழ்ந்த சூழலை எடுத்துரைக்க.

18. பல்லவர் காலத்தில் கலை வளர்ச்சியடைந்த நிலையினை விவரிக்க.

19. சோழர் ஆட்சிமுறைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

20. பாளையக்காரர்களின் ஆங்கிலேயர் எதிர்ப்பு பின்னணியினை விளக்குக.

| D–2045 |
|---|

| Sub. Code |
|---|
| 10721 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Second Semester

அறஇலக்கியம்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. எல்லா உயிர்களும் கைகூப்பி யாரை வணங்கும் என்கிறார். வள்ளுவர்.

2. எம்மூன்றும் பண்புடைய குடியில் பிறந்தார்க்கு இயல்பாய் அமையும்.

3. சிறந்த தவம் எது?

4. மரம்போல்வர் யார்?

5. முதுசொல் என்பது எந்நூலைக் குறிக்கும்.

6. காஞ்சிரங்காழ் தெங்காகாது-குறிப்பு தருக.

7. குரங்கினுள் நான்முகத்த இல் - விளக்குக.

8. கருடனை காசியில் வட்டமடிக்கச் செய்தவர் யார்?

9. மனித உடலை போர்த்தியிருப்பவை எவை?

10. குமரகுருபரர் நூல்கள் இரண்டினைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திருக்குறளின் சிறப்புகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உயர்குடிப் பிறந்தாரின் இயல்புகளாக வள்ளுவர் கூறவன யாவை?

12. (அ) வாழ்வியல் நூல் திருக்குறள் - ஆய்க.

(அல்லது)

(ஆ) மானமுடையாரின் செயல்பாட்டினை எடுத்துரைக்க.

13. (அ) சான்றான்மையின் பண்புகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) அறன் வலியுறுத்தல் குறித்து நாலடியார் கூறுவன யாவை?

14. (அ) பிறன்மனை கொண்டார் அடையும் தீமைகள் யாவை?

(அல்லது)

(ஆ) பழமொழி நானூறு உணர்த்தும் வரலாற்றுக் கதைகள் இரண்டினை சான்றுடன் விளக்குக.

15. (அ) திருமூலர் கூறும் நிலையான செல்வம் எது என்பதை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) 'கெடுவது காட்டுங் குறி'- விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. திருக்குறள் வாழ்வியல் நூல் என்பதை குடிமை அதிகாரம் வழி ஆய்க.

17. பண்புடையாரின் பண்புகளாக வள்ளுவர் உரைப்பனவற்றைத் தொகுத்துரைக்க.

18. நாலடியார் கூறும் அறக்கருத்துக்களைச் சான்றுகளுடன் விளக்குக.

19. நிலையில்லாதது எவையென திருமூலர் உரைக்கிறார் சான்று பகர்க.

20. குமரகுருபரரின் அறக்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

**D–2046**

| **Sub. Code** |
| --- |
| **10722** |

DISTANCE EDUCATION

B.Litt. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026

Second Semester

இலக்கணம் : நன்னூல் சொல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. தொடர்மொழி என்றால் என்ன?

2. உயர்திணைப் பெயர்கள் யாவை? சான்று தருக.

3. தெரிநிலை வினை என்றால் என்ன?

4. இரண்டாம் வேற்றுமையின் இலக்கணம் யாது? சான்று தருக.

5. திரிசொல் என்றால் என்ன ? சான்று தருக.

6. உருபு மயக்கம் என்றால் என்ன?

7. அன்மொழித் தொகை என்றால் என்ன ? சான்று தருக.

8. குறிப்பால் பொருளுணர்த்தும் இடைச்சொற்கள் - சான்றுகள் தருக.

9. ஈரறிவு உயிர்கள் யாவை?

10. ஒரு குணம் குறித்த பல உரிச்சொல் என்பது யாது? சான்று தருக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'நான்குமாம் திசைவட சொல் அணுகாவழி' - விளக்குக.

(அல்லது)

(ஆ) மூவகை மொழிகள் குறித்து விளக்குக.

12. (அ) இருதிணைப் பொதுப்பெயர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வினையெச்சம் பற்றி எழுதுக.

13. (அ) பெயரெச்சம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வழா நிலை, வழுவமைதி குறித்துச் சான்றுகளுடன் விளக்குக.

14. (அ) அறுவகை வினாவகைகளைச் சான்றுடன் காட்டுக.

(அல்லது)

(ஆ) விடை வகைகள் குறித்துச் சான்றுகளுடன் விளக்குக.

15. (அ) அசைநிலை இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உயிரல்லாப் பொருள்களின் பண்புகள் குறித்து நன்னூலார் குறிப்பிடுவனவற்றை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பெயர்ச்சொற்களின் வகைகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

17. வேற்றுமை குறித்து விவரி.

18. நன்னூல் காட்டும் வினைமுற்றுகள் குறித்து விவரிக்க.

19. இடையியல் தரும் செய்திகளை விளக்கியெழுதுக.

20. நன்னூல் காட்டும் உயிர்ப் பாகுபாடு பற்றிக் கட்டுரை எழுதுக.

---

**D–2047**

**Sub. Code**
**10723**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Second Semester

தமிழ்மொழி வரலாறு

(CBCS 2018-19 Academic Year onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. தமிழ் வரலாற்று ஆராய்ச்சிக்கு உதவும் கல்வெட்டுக்களில் காணப்படும் வரிவடிவம் என்ன?

2. மெய்யொலிகளைப் போன்று ஒலிக்கப்படும் எழுத்துக்கள் எவையெவை?

3. மகள் என்பதன் மாற்று வடிவமாகக் குமரிலப்பட்டர் சான்றுரைப்பன யாவை?

4. செய்யாநின்றான் - என்பதில் இடம்பெறும் இடைநிலை எக்காலத்திற்கு உரியது?

5. தமிழில் சுரபத்தி எழுத்துக்கள் எவை?

6. மொழியிடை வெடிப்பொலி இரட்டித்தல் என்றால் என்ன?

7. கீழ்கண்ட கலைச்சொற்களைத் தமிழாக்கம் செய்க. Semantics, Morphology.

8. ‘G’ எனும் கல்வெட்டு வடிவத்தின் தமிழ் எழுத்து வடிவம் என்ன?

9. ஒப்புமையின் வகைகள் யாவை?

10. வீரமாமுனிவர் சீர்த்திருத்திய தமிழ் எழுத்துக்கள் எவையெவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) மொழிக்கான வரலாற்றுச் சான்றுகள் எவையெவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் - பிராமிக் கல்வெட்டுக் குறித்து அறிமுகம் செய்க.

12. (அ) நாயக்கர் காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்களைக் சுருக்கமாக விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்களைத் தெளிவுபடுத்துக.

13. (அ) உயிரொலி மாற்றங்கள் என்றால் என்ன? சான்றுரைக்க.

(அல்லது)

(ஆ) கிளைமொழிகள் என்றால் என்ன? அதன் செல்நெறிகளை விளக்குக.

14. (அ) தமிழ் வரிவடிவத்தின் தொடக்க கால வரலாற்றினை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் காலத் தமிழ் குறித்தெழுதுக.

15. (அ) தொல் திராவிடம் என்ற சொல்லை அறிமுகம் செய்துரைக்க.

(அல்லது)

(ஆ) சங்க கால அக இலக்கியங்கள் எவையெவை? அவற்றின் பாடுபொருட்களை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

16. பல்லவர் காலத் தமிழ் குறித்துக் கட்டுரை வரைக.

17. அறிவியல் தமிழின் இன்றைய நிலையினை மதிப்பிட்டாய்க.

18. மொழிபெயர்ப்பின் வகைகளை விரித்துரைக்க.

19. தொலைக்காட்சியின் தோற்றமும் இன்றைய நிலையும் குறித்து விவரி.

20. எழுத்துச் சீர்திருத்தம் என்றால் என்ன? வரலாற்று நிலையில் தெளிவுறுத்துக.

———————

**D–2048**

| Sub. Code |
|---|
| 10724 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026

Second Semester

திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. மாற்றிலக்கணத்தின் மூன்று பகுதிகள் எவை?
2. பண்படா நான்கு திராவிட மொழிகளைக் கூறுக.
3. ஒப்பியல் ஆய்வாளர்கள் நிலப்பரப்பு அடிப்படையில் திராவிட மொழியை எத்தனைப் பிரிவுகளாகப் பிரித்தனர்? அவை யாவை?
4. நீலகிரி மலைப் பகுதிகளில் மக்கள் பேசும் மொழிகளைக் குறிப்பிடுக.
5. தென்திராவிட மொழிகள் எத்தனை உள்ளன?
6. ஒலியை உருவாக்கக் கூடிய மனித உறுப்புகள் எவை?
7. உயிரெழுத்து நீட்சி என்றால் என்ன?
8. தமிழுக்கே உரிய சிறப்பொலியாகக் கருதப்படும் எழுத்து எது?
9. ஓரினமாதல் என்றால் என்ன?
10. தொல்காப்பியர் குறிப்பிடும் வேற்றுமை எத்தனை வகைப்படும்.

## பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கால்டுவெல் குறிப்பிட்ட திராவிட மொழிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நடுத்திராவிட மொழிகளின் சிறப்புகளை விளக்குக.

12. (அ) மூக்கின உயிர்களின் பிறப்பு, ஒலி வேறுபாடு பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உடம்படுமெய் பெறும் முறையை விளக்குக.

13. (அ) திராவிட மொழிகளின் பால் பாகுபாடு குறித்து சுருக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பெயரடைகள் என்றால் என்ன? விளக்குக.

14. (அ) ஒன்று, இரண்டு என்னும் எண்ணுப் பெயர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) செயப்பாட்டுவினை பற்றிய அறிஞர்கள் கருத்துக்கனைச் சுட்டுக.

15. (அ) வினையெச்சம் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வினையாலணையும் பெயர்கள் குறித்து விளக்குக.

## பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களும் எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. திராவிட மொழிகளின் தனித்தன்மையை எடுத்துரைக்க.

17. மெய்யொலிகளின் பிறப்பை விரித்துரைக்க.

18. உயிரொலி மாற்றங்கள் குறித்து கட்டுரை வரைக.

19. திராவிட மொழிகளில் வேற்றுமையின் எட்டு வகைகளைத் தொகுத்துரைக்க.

20. திராவிட மொழிகளின் மூவிடப்பெயர் குறித்து விளக்கி வரைக.

———————

**D–2049**

| Sub. Code |
|---|
| **10731** |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Third Semester

சமய இலக்கியம்

(CBCS 2018– 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. தமிழ் வேதம் என்ற சிறப்புப் பெயர் பெற்ற நூல் எது?

2. 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றவர் யார்?

3. கோதை என்ற இயற்பெயருடையவர் யார்?

4. திருநாவுக்கரசரின் தமக்கையார் யார்?

5. மாணிக்கவாசகருக்கு ஐந்தெழுத்து மந்திரம் உபதேசித்தவர் யார்? இடம் எது?

6. 'குதம்மை சித்தர்' - பெயர்க்காரணம் தருக.

7. தெய்வமணிமாலை பாடியவர் யார்?

8. 'கண்ணி' - என்பதன் பொருள் யாது?

9. கிறிஸ்தவக் கம்பர் என்று அழைக்கப்படுபவர் யார்?

10. 'பால்ய பிரார்த்தனை' என்பதன் பொருள் யாது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நந்தி என்பார் யார்? அவரின் இயல்பைக் கூறுக.

(அல்லது)

(ஆ) பாவை நோன்பு பற்றி விவரி.

12. (அ) திருநாவுக்கரசர் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) திருவாசகத்தில் இடம் பெறும் புராணக் கதை ஒன்றினை விவரி.

13. (அ) 'சிவனே மலை மலையே சிவன்' என்ற கருத்தை சிவப்பிரகாசர் எவ்வாறு நிறுவுகிறார்.

(அல்லது)

(ஆ) இசைக்குப் பொதிய மலை உருகிய வரலாற்றினை சோணசைல மாலை கொண்டு விளக்குக.

14. (அ) இல்லை இல்லை என்று இராமலிங்க அடிகளார் எவற்றைக் கூறுகிறார்?

(அல்லது)

(ஆ) தன்னை மஸ்தான் எவ்வாறெல்லாம் கூறிக்கொள்கிறார்?

15. (அ) மஸ்தானின் வேண்டுதல் யாது?

(அல்லது)

(ஆ) இயேசுவின் திருப்பெயர்களாக எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை கூறுவனவற்றை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளி.

16. திருமந்திரம் எடுத்து மொழிவன யாவை?

17. 'ஓங்கி உலகளந்த உத்தமன்' யார்? விளக்கி எழுதுக.

18. திருப்பத்தூரில் உள்ள இறைவனின் சிறப்புக்காக திருநாவுக்கரசர் கூறுவன யாவை?

19. யாத்திரைப்பத்தில் மாணிக்கவாசகர் உலகத்தோருக்கு உரைக்கும் செய்திகளை விவரிக்க.

20. ஏசுநாதர் மீது கொண்ட பக்தியை எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

———————

| D–2050 |
|---|

| Sub. Code |
|---|
| 10732 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Third Semester

இலக்கணம் அகப்பொருளும் யாப்பும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. கைக்கிளை - குறிப்பு தருக.

2. வாயில்கள் யாவர்?

3. வரைதல் வேட்கை - குறிப்பு தருக.

4. வரைவிற்கு உரிய கிளவித்தொகை எவை?

5. மனை மருட்சி என்றால் என்ன?

6. வெள்ளணியைத் தலைவி எப்போது அணிவாள்?

7. யாப்பருங்கலக்காரிகை நூலின் ஆசிரியர் யார்?

8. காரிகை உரைக்கும் அசையின் வகைகள் யாவை?

9. நேரடி என்பது எத்தனை சீர்களைக் கொண்டது?

10. தொன்மை - குறிப்புரைக்க.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஐந்திணைகளுக்கும் உரிய உரிப்பொருளினை எழுதுக.

(அல்லது)

(ஆ) கற்புக்கால பிரிவின் வகைகளை எடுத்துரைக்க.

12. (அ) பாங்கிமதி உடன்பாடு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலின் வகைகளை விளக்குக.

13. (அ) உடன்போக்கு நிகழ்வினை விளக்குக.

(அல்லது)

(ஆ) கற்பியல் கூறும் இல்வாழ்க்கையின் நான்கு வகையினை விளக்குக.

14. (அ) தளை குறித்து விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) தொடை விகற்பம் எத்தனை வகைப்படும்? விளக்குக.

15. (அ) மருட்பாவை விளக்கிக் கூறுக.

(அல்லது)

(ஆ) வஞ்சிப்பா பொதுவிலக்கணம் கூறி, வகைப்படுத்திக் காட்டுக

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. களவுப் புணர்ச்சியின் வகைகளை விளக்கியுரைக்க.

17. ஊடல் தணிக்கும் வாயில்கள் குறித்து கட்டுரைக்க.

18. நம்பியகப்பொருள் காட்டும் களவியல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. நால்வகைப் பாவின் பொதுவிலக்கணம் கூறுக.

20. ஒழிபியியல் கூறும் எண் வகை வனப்பு குறித்து ஒரு கட்டுரை வரைக.

---

**D–2051**

| Sub. Code |
| --- |
| **10733** |

DISTANCE EDUCATION

B. Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Third Semester

தமிழிலக்கிய வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. பாரதப்போரில் உணவளித்த மன்னன் யார்?

2. நெடுந்தொகை என்றழைக்கப்படும் நூல் எது?

3. பிள்ளைத்தமிழ் என்றால் என்ன?

4. திரிகடுகம்-பெயர்க்காரணம் தருக.

5. சமயக்குரவர் நால்வரின் பெயர்களைச் சுட்டுக.

6. நம்மாழ்வாரின் சீடர் யார்?

7. பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?

8. தமிழின் முதல் மூன்று நாவல்கள் யாவை?

9. வீரமாமுனிவர், எழுதிய சிறுகதையின் பெயர் என்ன?

10. முடியரசன் எழுதிய காப்பியங்களின் பெயர்களைக் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) முச்சங்கம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) சமணர்களின் தமிழ்ப்பணி பற்றி எழுதுக.

12. (அ) பரணியின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) காரைக்கால் அம்மையாரின் பெருமைகளைச் சுட்டுக.

13. (அ) இஸ்லாமியரின் சிற்றிலக்கிய தமிழ்த்தொண்டு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி பற்றி எழுதுக.

14. (அ) கீர்த்தனை நாடகங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திருமுறை கண்ட வரலாற்றினை எடுத்துரைக்க.

15. (அ) பிற்காலப்பாட்டியல் நூல்களை புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) புதுக்கவிஞர்களுள் அப்துல்ரகுமான் பெறுமிடம் குறித்து எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. பத்துப்பாட்டு நூல்களைச் சுட்டி, அவற்றைப் பற்றிய குறிப்புகளைச் சுருக்கி வரைக.

17. பன்னிரு திருமுறைகள் குறித்து எழுதுக.

18. தமிழ் நாடகங்களின் வகைகளைக் குறிப்பிடுக.

19. இலக்கியங்களில் நாட்டுப்புறக் கூறுகளின் தாக்கம் பற்றி விளக்குக.

20. மேனாட்டு அறிஞர்கள் தமிழுக்கு ஆற்றிய பணிகளைப் பற்றி பட்டியலிடுக.

**D–2052**

**Sub. Code**
**10734**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Third Semester

காப்பிய இலக்கியம்

(CBCS 2018-2019 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. சிலம்பின் மூன்று காண்டங்களின் பெயர்களை எழுதுக.

2. மாதவி சோழனிடம் பெற்ற பட்டத்தின் பெயர் என்ன?

3. சிலம்பில் கூறப்படும் எழினி என்பதன் வகைகள் எத்தனை?

4. திருத்தக்கத் தேவர் பாடிய நூல்களின் பெயர்களை எழுதுக.

5. சீவகசிந்தாமணி எந்த வடமொழி நூல்களிலிருந்து தோன்றியது?

6. கம்பர் - சிறு குறிப்பு வரைக.

7. பெரியபுராணம் எந்நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது?

8. தேம்பாவணி - பொருள் தருக.

9. தேம்பாவணி யாருடைய வரலாற்றைக் கூறுகிறது?

10. சீறாப்புராணத்தின் காண்டங்களை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) மாதவி ஆடிய 11 வகை ஆடல்கள் யாவை?

(அல்லது)

(ஆ) கோப்பெருந்தேவி கண்ட தீக்கனா யாது?

12. (அ) புறஞ்சேரி இறுத்த காதையின் செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) கோவலனின் முற்பிறப்பு குறித்து மதுராபுரித் தெய்வம் கூறியது யாது?

13. (அ) சீவகசிந்தாமணி - நூற் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) கேமசரியின் அழகினை எடுத்துரைக்க.

14. (அ) பெரியபுராணம் நூற்குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) கைகேயி சூழ்ச்சி செய்த விதத்தை எழுதுக.

15. (அ) பாலை புகுபடலச் செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வேடனின் மனமாற்றத்தை விவரி.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. வழக்குரை காதையை விவரிக்க.

17. 'சீவக சிந்தாமணி மண நூல்' என்பதை நிறுவுக.

18. இராமனின் பண்பு நலன்களை விவரிக்க.

19. தன் மனதில் கோயில் கட்டிய பூசலாரின் பக்தித் திறத்தை விவரிக்க.

20. நபிகள் நாயகம் மானுக்குப் பிணை நின்றதை விவரிக்க.

---

| D–2053 |
|---|

| Sub. Code |
|---|
| 10741 |

DISTANCE EDUCATION

B. Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Fourth Semester

கவிதை இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. அமுதவல்லிக்கு செய்யுள் இலக்கணத்தைக் கற்றுக் கொடுத்தது யார்?

2. உதாரனுக்கு மன்னன் கொடுத்த தண்டனை யாது?

3. உமர்கய்யாம் பாடல்களைத் தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?

4. தமிழ்த்தெய்வ வணக்கப் பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

5. மார்கழிக்குப் பெண் என்று கண்ணதாசன் யாரைக் குறிப்பிடுகிறார்?

6. கண்ணாடிச் சிறகுள்ள பறவை எனும் கவிதையின் ஆசிரியர் யார்?

7. அப்துல் ரகுமானின் முதல் கவிதைத் தொகுப்பு நூல் எது?

8. காசி ஆனந்தனின் வெற்றிவிழா கவிதை பாடப்பட்டதன் காரணம் என்ன?

9. மனிதன் மனிதனாக வாழ யாரிடம் செல்ல வேண்டும் என வைரமுத்து கூறுகிறார்?

10. தமிழன்பனின் சாகித்ய அகாடெமி விருது பெற்ற நூல் எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) விதுரனின் பண்பு நலனை விளக்குக.

(அல்லது)

(ஆ) பாஞ்சாலி செய்த சபதத்தினை எடுத்துரைக்க.

12. (அ) தமிழணங்கின் இளமைத் தன்மையை தமிழ்த்தெய்வ வணக்கப்பாடல் கொண்டு எழுதுக.

(அல்லது)

(ஆ) சிக்கனத்தைக் கடைபிடிப்பதன் அவசியத்தை சுரதாவின் கவிதை கொண்டு எடுத்துரைக்க.

13. (அ) தைப்பாவையின் வரவு குறித்து கண்ணதாசன் பாடுவன யாவை?

(அல்லது)

(ஆ) அப்துல்ரகுமானின் கவிதை பற்றிய கொள்கையை விளக்குக.

14. (அ) காசி ஆனந்தனின் தமிழ்ப்பற்றை வெற்றிவிழா கவிதை மூலம் எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) மரத்தின் பயன்களாக வைரமுத்துக் கூறுவன யாவை?

15. (அ) நான்யார்? கவிதைகளில் காணலாகும் தத்துவங்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கழனியூரனது ஹைக்கூ கவிதையின் சிறப்புக்களைச் சான்றுடன் எடுத்துரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவாக விடை தருக.

16. புரட்சிக்கவி மூலம் குடியாட்சியின் அவசியத்தை பாரதிதாசன் எங்ஙனம் வலியுறுத்துகிறார்? விளக்குக.

17. உமர்கய்யாம் பாடல்களில் காணலாகும் வாழ்க்கைத் தத்துவங்களை விரித்துரைக்க.

18. கண்ணாடிச் சிறகுள்ள அதிசயப் பறவையின் அழகில் சிற்பி மூழ்கித் திளைப்பதை விவரி.

19. தமிழர்பண்பாட்டை தைப்பாவை வழி விளக்கி வரைக.

20. வாழ்க்கையின் சிக்கலையும் துக்கத்தையும் கல்யாண்ஜியின் கவிதை கொண்டு விளக்குக.

**D–2054**

| Sub. Code |
|---|
| 10742 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Fourth Semester

இலக்கணம், புறப்பொருளும் அணியிலக்கணமும்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. கரந்தைத் திணையின் இலக்கணம் யாது?

2. பெருஞ்சோற்று நிலை - விளக்கம் தருக.

3. தலை மாராயம் - விளக்கம் தருக.

4. உழிஞைத்திணையின் இலக்கணம் யாது?

5. தும்பைத் திணை- விளக்கம் தருக.

6. முரசவாகை துறை குறித்து எழுதுக.

7. உவமை என்றால் என்ன? விளக்குக.

8. தீவக அணியின் இலக்கணம் யாது?

9. ' எண்வகை மெய்ப்பாடுகள் யாவை? - விளக்கம் தருக.

10. சிலேடை அணியின் இலக்கணம் யாது? இதன் வகைகளை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வெட்சித் திணையின் இலக்கணம் யாது? அதன் துறைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) தன்மேம்பாடு தானெடுத்து உரைத்தல் குறித்து விளக்குக.

12. (அ) முதுமொழி வஞ்சி, குறு வஞ்சித் துறைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) காஞ்சிப் போரில் பேய்களின் செயல்களை விளக்கும் துறைகள் குறித்து எழுதுக.

13. (அ) யானை, குதிரை, தேர்ப் படைகளின் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) பரிசில் துறை, இயன்மொழி வாழ்த்து ஆகிய துறைகள் குறித்து விளக்குக.

14. (அ) வேற்றுப்பொருள் வைப்பணி குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) நுட்ப அணியின் இலக்கணம் யாது? சான்றுகளுடன் விளக்குக.

15. (அ) நிரல் நிறை அணியின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மாறுபடு புகழ்நிலை அணி குறித்து விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழர்களின் போர் முறைகள் குறித்து புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுவனவற்றை விளக்கிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

17. காஞ்சிப்படலத்தின் சிறப்புகளை விளக்கியெழுதுக.

18. பாடாண் படலத்தின் தனிச்சிறப்புகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

19. தன்மை அணியின் வகைகள் குறித்து விவரிக்க.

20. தற்குறிப்பேற்ற அணியின் இலக்கணம் யாது? அதன் வகைகளைச் சான்றுகளுடன் விளக்கியெழுதுக.

———————

**D–2055**

| Sub. Code |
|---|
| **10743** |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Fourth Semester

நாட்டுப்புறவியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நாட்டுப்புற மக்களின் வேறுபெயர்கள் யாவை?

2. மாடன் தெய்வங்கள் – சான்று தருக.

3. கிராமப்புற ஆண்தெய்வங்களின் ஏதேனும் இரண்டின் பெயர்களை எழுதுக.

4. "நாட்டுப்புறவியல்" சொல் விளக்கம் தருக.

5. நாட்டார் கதைகளில் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

6. தாலாட்டு பெயர் விளக்கம் தருக.

7. ஒப்பாரி என்றால் என்ன?

8. ஏதேனும் இரண்டு விடுகதைகளை எழுதுக.

9. பொய்க்கால் குதிரை ஆட்டம் தோன்றிய இடம் எது?

10. தேசிங்குராஜா ஆட்சி செய்திட்ட நாடு எது?

பகுதி ஆ — $(5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தேசிங்குராஜன் கதை – குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கணவனை இழந்த பெண்ணின் அவலத்தை ஒப்பாரி பாடல் வழி எடுத்துரைக்க.

12. (அ) கோலாட்டம் ஆடும் முறையை விளக்குக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் எவை? விளக்குக.

13. (அ) கும்மியாட்டம் குறித்தும் அதன் வகைகள் குறித்தும் எழுதுக.

(அல்லது)

(ஆ) பழமொழிகளின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.

14. (அ) மயிலாட்டம் என்றால் என்ன? ஆடப்படும் விதத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) கோடங்கிப் பாட்டு என்றால் என்ன? விளக்குக.

15. (அ) தாலாட்டுப் பாடல்களில் காணலாகும் சடங்கு முறைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் குறித்து விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழக நாட்டுப்புற வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

17. சமூகக் கதைப்பாடல்கள் குறித்து கட்டுரை வரைக.

18. நாட்டுப்புற விளையாட்டுக்களை விளக்கி எழுதுக.

19. தோற்பாவைக் கூத்து என்றால் என்ன? அதன் சிறப்புகளை எடுத்துரைக்க.

20. நாட்டுப்புற இலக்கியங்களின் அமைப்பியலை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

———————

**D–2056**

**Sub. Code**
**10744**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Fourth Semester

இதழியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ஜெர்னலிசம் (Journalism) சொல்லின் மூலமொழி எது?

2. சிறுவர் இதழ்களைக் கூறுக.

3. பத்திரிகையின் மூன்று முக்கிய பணிகள் யாவை?

4. தமிழ் இணையத்தளத்தின் தந்தை யார்?

5. தமிழ்நாட்டில் தோன்றிய முதல் இதழ் எது?

6. காந்தியடிகள் நடத்திய இதழ்களைச் சுட்டுக.

7. உலகச் செய்தி நிறுவனங்களைக் கூறுக.

8. தலையங்கத்தை எழுதுபவர் யார்?

9. அரசியல் இதழ்களைக் கூறுக.

10. புலனாய்வு இதழ்கள் சிலவற்றை எடுத்துரைக்க.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு <u>ஒரு பக்க</u> அளவில் விடை தருக.

11. (அ) தகவல் தொழில் நுட்பத்தில் வானொலி பெறுமிடத்தை ஆய்க.

(அல்லது)

(ஆ) மக்கள் தொடர்பு சாதனங்களை எடுத்துரைக்க.

12. (அ) பத்திரிகையின் பொது அறங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) மக்களாட்சியில் பத்திரிகையின் பங்கு குறித்து எழுதுக.

13. (அ) செய்தியாளர்களின் பணியினைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) செய்தியாளர்களிடன் இருக்க வேண்டிய கருவிகள் யாவை?

14. (அ) தலைப்பின் வகைகளைச் சான்றுகளுடன் கூறுக.

(அல்லது)

(ஆ) இதழ்கள் தொடங்குவதற்கான வழிமுறைகள் யாவை?

15. (அ) விளம்பரச் சாதனங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நச்சு இதழ்கள் பற்றி நீவிர் அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தகவல் தொழில் நுட்பத்தில் கணினியின் பங்கினை விவரிக்க.

17. இந்திய விடுதலைப் போராட்டத்தில் இதழ்களின் பங்கினை ஆராய்க.

18. செய்தி வகைகள் குறித்து விளக்குக.

19. தலையங்கம் பற்றி ஒரு கட்டுரை வரைக.

20. தற்காலத் தமிழ் இதழ்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

**D–2057**

**Sub. Code**
**10751**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Fifth Semester

பண்டைய இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. அகநானூறு — குறிப்பு வரைக.

2. மறம் வீங்கு புகழ் — விளக்கம் தருக.

3. புனையா ஓவியம் என்று நெடுநல்வாடை யாரைக் குறிப்பிடுகின்றது? ஏன்?

4. பரிபாடல் — நூற்குறிப்பு எழுதுக.

5. இடைச்சுரத்துப் பத்து — பெயர்க்காரணம் எழுதுக.

6. செவ்வேள் பற்றிய செய்திகள் யாவை?

7. திருக்குறள் நூல் அமைப்பு குறித்து எழுதுக.

8. குலத்தின்கண் ஐயப்படும் என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

9. குன்றின் அனையாரும் குன்றுவர் என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகின்றார்?

10. நல்குரவு — பொருள் தருக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) வரைவு கடாயது எனும் துறையை ஆவூர் மூலங்கிழார் பாடல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) கரந்தைப் போரில் மாண்ட வள்ளலைப் பற்றிப் பாணன் பாடியன யாவை?

12. (அ) இமயவரம்பன் சேரலாதனின் சிறப்பை கூந்தல் விறலியர் என்ற பாடல்வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) கூதிர் காலத்தின் இயல்புகளை விவரிக்க.

13. (அ) பரிபாடல் காட்டும் வைணவசமயத் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) செலவுப்பத்து காட்டும் தலைவியின் துயரை விளக்குக.

14. (அ) மானம் குறித்து திருவள்ளுவர் குறிப்பிடுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நற்குணங்களாக சான்றாண்மை அதிகாரத்தின் வழி வள்ளுவர் குறிப்பிடுவனவற்றை விளக்குக.

15. (அ) நாணம் பற்றி வள்ளுவர் உரைப்பன யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) சுழலும் ஏர்ப்பின்னது உலகம் — விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பாடாண் திணைப் பாடற்கருத்துகளை ஆலூர் கிழார் பாடல்கள் வழி விவரித்தெழுதுக.

17. பதிற்றுப்பத்து காட்டும் சேர அரசனின் இயல்புகளை விளக்குக.

18. நெய்தற்கலி பாடல்கள் வழி முப்பொருட்கள் பற்றி விவரிக்க.

19. புலவர் நக்கீரரின் கவித்திறனை நெடுநல்வாடை கொண்டு விவரி.

20. 'இன்றைய சமூகத்திற்குத் திருக்குறள்' எனும் தலைப்பில் கட்டுரை ஒன்றினை எழுதுக.

| D–2058 |
|---|

| Sub. Code |
|---|
| 10752 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Fifth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் : எழுத்து — இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. "முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன" — விளக்குக.

2. ஒரெழுத்தொருமொழி என்றால் என்ன? சான்று தருக.

3. சார்பெழுத்துக்கள் எங்ஙனம் பிறக்கும்?

4. மூவகைத் திரிபுகள் எவையெவை?

5. கலம் என்னும் சொல் புணர்ச்சியில் பெறும் சாரியை எது?

6. நின்கை என்ற சொல்லின் புணர்ச்சி விதியைத் தருக.

7. "பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும்" — ஏன்?

8. புணர்ச்சி விதி தருக — சாத்தந்தை.

9. சொல் விளக்கம் தருக — ஐ, அம், பல்.

10. குற்றியலுகரத்தின் வகைகளைச் சான்றுகளுடன் எழுதுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) சார்பெழுத்துக்களின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மெய்ம்மயக்கம் என்றால் என்ன? வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

12. (அ) எழுத்துக்களின் பொதுப்பிறப்பினைத் தொல்காப்பியர் வழி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சாரியை என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்? விளக்குக.

13. (அ) உயிரீற்றுச் சொற்கள் வேற்றுமை உருபேற்கும்போது சாரியை பெறுதல் எங்ஙனம்? விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இயல்பாகப் புணரும் அகர ஈற்றுச் சொற்கள் எவையெவை? சான்று தருக.

14. (அ) தேன் என்னும் சொல்லின் புணர்ச்சி விதிகளைத் தருக.

(அல்லது)

(ஆ) ஏழ் என்னும் சொல் புணருமாற்றை விளக்குக.

15. (அ) எண்ணுப்பெயர்முன் அளவைப் பெயர்கள் புணருவதைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒன்பஃது + பஃது = தொண்ணூறு — எங்ஙனம்? விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

16. மொழிக்கு முதலாகும் எழுத்துக்களைச் சான்றுகாட்டி நிறுவுக.

17. தொல்காப்பியர் ஒரு மொழியியலாளர் என்பதைப் பிறப்பியல் வழிநின்று ஆய்க.

18. "ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப" — எங்ஙனம்? விவரிக்க.

19. இகர ஈற்றுச் சொற்கள் எங்ஙனம் புணர்ச்சியில் திரியும்? தெளிவுறுத்துக.

20. மகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியில் அடையும் மாற்றங்களை விவரி.

**D–2059**

**Sub. Code**
**10753**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Fifth Semester

ஊடகவியல்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ஊடகம் - குறிப்பு தருக.

2. சிறுவர் இதழ்கள் சிலவற்றைக் கூறுக.

3. அறிஞர் அண்ணாவால் தொடங்கப்பெற்ற இதழ்கள் எவை?

4. தமிழில் வெளிவரும் ஆன்மிக இதழ்களைக் கூறுக.

5. தலையங்கம் எழுதுபவர் யார்?

6. பத்திரிகை விளம்பரங்கள் சிலவற்றை எடுத்து கூறுக.

7. வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் எவை?

8. காட்சி ஊடகங்கள் இரண்டினைக் கூறுக.

9. முகநூல் குறிப்பு தருக.

10. சமூக வலைதளங்களின் பெயர்களைச் சுட்டுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஊடகவியலால் ஏற்படும் நன்மைகள் யாவை?

(அல்லது)

(ஆ) ஊடகவியலின் பணிகளைக் கூறுக.

12. (அ) ஊடகவியல் குறித்த அறிஞர்களின் கருத்தினை எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ் வெளிவரும் வார மாத இதழ்கள் குறித்து எழுதுக.

13. (அ) ஓர் இதழ் அசிரியரின் பண்புகளை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) இந்திய செய்தி நிறுவனங்கள் பற்றி நீவிர் அறிவன யாவை?

14. (அ) அச்சு ஊடக சாதனங்களின் வகைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) பத்திரிகை சட்டங்களைப் பட்டியலிடுக.

15. (அ) இணைய இதழ்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மின்னணு ஊடக சாதனங்களைப் பட்டியலிடுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. இதழ்களின் வகைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

17. செய்தி வகைகளை விளக்கி எழுதுக.

18. நாளிதழ்களின் உள்ளடக்கம் எவ்வகையில் அமையும் என்பதை விவரிக்க.

19. விளம்பரங்களின் வகைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

20. இணையம் இன்றைய மனித வாழ்க்கைக்கு அவசியம் என்பதை நிறுவுக.

**D–2060**

**Sub. Code**
**10754**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Fifth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் : சொல் — சேனாவரையம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours

Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. வண்ணச் சினைச்சொல் என்றால் என்ன?

2. ஆறாம் வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளுள் நான்கினை எழுதுக.

3. பிண்டப்பெயர் என்றால் என்ன?

4. அஃறிணைப் பெயர்கள் எங்ஙனம் விளியேற்கும்?

5. விரவுப்பெயர்களின் வகைகளைக் குறிப்பிடுக.

6. குறிப்பு வினை என்றால் என்ன?

7. பிரிவில் அசைநிலைகள் எவையெவை?

8. விளையாட்டு என்னும் பொருளை உணர்த்தும் உரிச்சொற்களை எழுதுக.

9. செய்யுள் விகாரம் என்றால் என்ன?

10. "கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" — விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) திணை, பால் ஐயம்தோன்றும் போது கூறும் முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பெயர் வேற்றுமை என்றால் என்ன? விளக்குக.

12. (அ) விளக்குக : தடுமாறு தொழிற்பெயர்.

(அல்லது)

(ஆ) விளியேலாதப் பெயர்கள் எவையெவை? விளக்குக.

13. (அ) அஃறிணைப் பெயர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெயரெச்ச வாய்பாடுகள் குறித்தெழுதுக.

14. (அ) உம் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருட்கள் எவையெவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) உரிச்சொல்லின் மரபுகளாகத் தொல்காப்பியர் மொழிவனவற்றை எடுத்துரைக்க.

15. (அ) செய்யுள் ஈட்டச் சொற்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) விளக்குக : ஈ, தா, கொடு

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.

16. இரண்டாம் வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளை விளக்கி எழுதுக.

17. மெய்யீறுகள் விளியேற்கும் போது அடையும் மாற்றங்களைத் தெளிவுரைக்க.

18. திணை அடிப்படையில் தெரிநிலை வினைமுற்று குறித்து எழுதுக.

19. ஒரு பொருள் உணர்த்தும் உரிச்சொற்களைப் பட்டியலிடுக.

20. தொகைமொழி என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

———————

| D–2061 |
|---|

| Sub. Code |
|---|
| 10761 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Sixth Semester

ஒப்பிலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. Comparative Literature என்பதை ஒப்பியல் இலக்கியம் என்று தமிழ்ப்படுத்தியவர் யார்?

2. கம்பராமாயணத்தைக் கிரேக்க, இலத்தீன் காப்பியங்களோடு ஒப்பிட்டவர் யார்?

3. ஒப்பிலக்கியத்துறையைப் பேணி வளர்த்த இருபெரும் நாடுகள் எவை?

4. 'மண்ணியல் சிறுதேர்' என்னும் மொழிபெயர்ப்பு நூலின் ஆசிரியர் யார்?

5. 'உலகம்' எனத் தொடங்கும் தமிழ் இலக்கியங்கள் எவை?

6. குன்றக்குரவை எந்த இறைவனுக்கு ஆடும் கூத்து?

7. பிற்கால அறநூல்கள் சிலவற்றைக் கூறுக.

8. 'குழவி மருங்கினும் கிளவதாகும்' — எந்த இலக்கியத்தின் தோற்றத்தைக் குறிக்கும்?

9. ‘காட்சி’ என்ற முதல் வசன கவிதையினை எழுதியவர் யார்?

10. தமிழரின் தேசிய இலக்கியம் சிலப்பதிகாரம் எனக் கூறியவர் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஒப்பிலக்கியத்தின் பண்புகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கிய அணுகு முறைகள் யாவை?

12. (அ) கூர்தலறக் கோட்பாடு – விளக்குக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பாளரின் அடிப்படைத் தகுதிகளைக் கூறுக.

13. (அ) தொல்காப்பியர் கூறும் வாய்மொழி இலக்கிய வகைகள் யாவை?

(அல்லது)

(ஆ) தமிழில் படைமடம் குறித்து எழுதுக.

14. (அ) தமிழ் பக்தி இயக்க வரலாற்றினை உரைக்க.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கியம் தோற்றத்திற்கான காரணிகள் யாவை?

15. (அ) ஒப்பிலக்கியத்தின் பயன்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) பொதுமை இலக்கியம் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குச் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஒப்பிலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்து விவரிக்க.

17. பிரெஞ்சு – அமெரிக்கக் கோட்பாடுகளை விளக்குக.

18. உளவியல் வகைகளை விளக்கியுரைக்க.

19. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து ஒரு கட்டுரை வரைக.

20. இலக்கிய வகைமை குறித்து விவரிக்க.

| D–2062 |
|---|

| Sub. Code |
|---|
| 10762 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Sixth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் : பொருள் – இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ‘முற்படக்கிளந்த எழுதிணை என்ப’ – குறிப்புரைக்க.

2. முதற்பொருள் எனக் குறிக்கப்பெறுவன யாவை?

3. பாதீடு என்றால் என்ன?

4. களவியல் காட்டும் ஆடவர்க்கு உரிய குணங்கள் யாவை?

5. தலைவிக்கு உயிரைவிட சிறந்தது எது?

6. ஓதற் பிரிவிற்குரிய ஆண்டுகள் எத்தனை?

7. நகை தோன்றுவதற்குரிய நிலைக்களன்களைக் குறிப்பிடுக.

8. தொல்காப்பியர் கூறும் உவம உருபுகள் எத்தனை?

9. ஆசிரியப்பாவிற்குரிய அடிகள் யாவை?

10. சிதலும் எறும்பும் எத்தனை அறிவுடையவை?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திணைகளுக்குரிய நிலம், தெய்வங்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) பெருந்திணையின் இலக்கணம் தருக.

12. (அ) வஞ்சிப்போரின் இயல்பினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) மறையோர் தேயத்து மன்றல் எட்டாவன யாவை?

13. (அ) கற்பியல் கூறும் தலைவியின் மாண்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) தோழி அறத்தொடு நிற்கும் முறையினை விளக்குக.

14. (அ) 'அப்பால் எட்டாம் மெய்ப்பாடென்ப' விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் காட்டும் அசை வகைகளை எழுதுக.

15. (அ) களவு கற்பு கூற்றிற்கு ஆகாதவரை நிரல்படுத்துக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியரின் உயிர் பாகுபாடுகளை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஐந்திணைகளுக்கும் உரிய முதல், கரு, உரிப்பொருளினை விவரிக்க.

17. வெட்சிப் போர் குறித்த செய்திகளைத் தொகுத்துக் காட்டுக.

18. களவில் செவிலி கூற்று நிகழுமிடங்களை விவரிக்க.

19. மெய்ப்பாட்டியல் கூறும் தலைவன் தலைவிக்கு ஆகா குணங்களைப் பட்டியலிடுக.

20. மரபியலில் உயிர்களின் இளமைப் பெயர் அமையும் விதத்தினை விவரிக்க.

| D–2063 |
|---|

| Sub. Code |
|---|
| 10763 |

DISTANCE EDUCATION

B. Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Sixth Semester

நாடகத் தமிழ்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பதினோரு ஆடல்கள் பற்றிக் கூறும் நூல் எது?

2. மத்தவிலாசப் பிரகசனம் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

3. கலைஞர் கருணாநிதி எழுதிய நாடகங்கள் இரண்டினைக் கூறுக.

4. வரலாற்று நாடகங்கள் சிலவற்றை எழுதுக.

5. கூத்துப்பட்டறையை உருவாக்கியவர் யார்?

6. சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய நாடகங்கள் எவை?

7. நாடக நடிகர்களாக இருந்து திரைத்துறைக்கு வந்து புகழ்பெற்ற நடிகர்களாக மாறியவர்கள் யாவர்?

8. கலைவாணர் என அழைக்கப்பட்டவர் யார்?

9. திருவாரூரில் பழனியப்பன் நாடகத்தை எழுதி நடித்தவர் யார்?

10. சாகுந்தலம் நாடகத்தை எழுதியவர் யார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நாடகத்தின் பயன்களாக பரிதிமாற்கலைஞர் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) பல்லவர் கால நாடகங்களை எடுத்துரைக்க.

12. (அ) ஓரங்க நாடகங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) புராண நாடகங்களின் சிறப்பினை எடுத்துரைக்க.

13. (அ) வானொலி நாடகங்கள் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) களரி என்பது யாது? விளக்குக.

14. (அ) கிட்டப்பாவின் கலைத்திறனை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கணேசன் சிவாஜியாக மாறிய திறத்தை எடுத்துரைக்க.

15. (அ) விடுதலை வேள்வியல் நாடகக் கலைஞர்களின் பங்கு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உலக நாடகங்கள் குறித்து விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழ் நாடகத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்து கட்டுரை வரைக.

17. தமிழ்நாடக வகைகளை விவரிக்க.

18. நவீன நாடகங்கள் குறித்து கட்டுரை எழுதுக.

19. சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகப்பணி குறித்து எழுதுக.

20. பெண் நாடகக் கலைஞர்கள் குறித்து கட்டுரைக்க.

| D–2064 |
|---|

| Sub. Code |
|---|
| 10764 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2026.

Sixth Semester

விளம்பரக்கலை

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. விளம்பரம் என்பதின் வேர்ச் சொல்லினைக் கூறுக.

2. அடிப்படை விளம்பரம் என்றால் என்ன?

3. விளம்பரங்கள் வெளியிடும் மின்னணு ஊடகங்கள் சிலவற்றைக் கூறுக.

4. உள்மனைச் சாதனம் என அழைக்கப்படும் சாதனம் எது?

5. விளம்பரத்தின் கூறுகள் இரண்டினைக் கூறுக.

6. விளம்பரத்தின் பணிகள் இரண்டினைக் கூறுக.

7. விளம்பர நிறுவனங்களுக்கு வழங்கப்படும் விருதுகள் யாவை?

8. விளம்பரத்தின் தலைப்பு இரண்டினைக் கூறுக.

9. விளம்பர அறங்கள் யாவை?

10. விளம்பரம் தொடர்பான சட்டங்கள் இரண்டினைத் தருக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) விளம்பரத்தின் இயல்புகள் யாவை?

(அல்லது)

(ஆ) நிதி தொடர்பான விளம்பரங்கள் குறித்து எழுதுக.

12. (அ) வானொலி விளம்பரங்களின் நன்மைகள் யாவை?

(அல்லது)

(ஆ) திரைப்பட விளம்பரங்கள் குறித்து எழுதுக.

13. (அ) விளம்பர நுகர்வோர் பற்றிய பண்புகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) விளம்பர நிறுவனத்தின் பணிகள் யாவை?

14. (அ) விளம்பர நிறுவனத்தின் தகுதிகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) விளம்பர நிறுவனத்தின் அமைப்பு முறைகளை விளக்குக.

15. (அ) விளம்பர நிறுவனங்களுக்குரிய ஒழுக்க நெறிகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) விளம்பர உத்திகள் குறித்து – விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விரிவான விடை தருக.

16. விளம்பரங்களின் பல்வேறு வகைகளை நிரல்படுத்தி விளக்குக.

17. செய்தித்தாள் விளம்பரங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

18. விளம்பரத்தின் கூறுகளை பட்டியலிட்டு விளக்குக.

19. விளம்பரத்தின் நன்மை தீமைகளை விளக்கியுரைக்க.

20. விளம்பரம் தொடர்பான சட்டங்கள் குறித்து விளக்குக.

---